செ.வெ.எண்.63 நாள்:23.09.2017

திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி முக்கூடல் ஆற்று பாலம் இரு கரை பகுதிகளில் இரண்டாம் கட்ட தூய்மைப் பணிகளில் சுமார் 1500 மாணவ, மாணவிகள், 500 பல்வேறு துறை அலுவலர்கள் , பல்வேறு தொண்டு நிறுவனங்களில் பிரதிநிதிகள் என சுமார் 2 ஆயிரம் நபர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்துக்கொண்டார்கள்.

----

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் இரு கரை பகுதிகளிலும் பாபநாசம் முதல் திருநெல்வேலி நான்கு வழி சாலை ஆற்றுப்பாலம் வரை 60 பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணிகள் இன்று (23.09.2017) நடைபெற்றது. திருநெல்வேலி மாவட்டம் முக்கூடல் ஆற்றுப் பாலம் கரை பகுதியில் தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வரும் மாணவ, மாணவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் ஊக்கப்படுத்தினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது :-

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி தூய்மைப்படுத்தும் பணிகளில் முதற்கட்டமாக திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் 25 இடங்களில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இன்று இரண்டாம் கட்டமாக பாபநாசம் முதல் திருநெல்வேலி நான்கு வழி புறவழிச்சாலை பாலம் வரையிலான 60 இடங்களில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முக்கூடல் பகுதிகளில் மட்டுமே 1500 மாணவ, மாணவிகள் 500 பல்வேறு துறை அரசு ஊழியர் சங்க பிரதிநிதிகள், பல்வேறு தொண்டு நிறுவனங்களில் பிரதிநிதிகள் என சுமார் 2 ஆயிரம் நபர்கள் பங்கேற்றனர். வெகு விரைவில் தாமிரபரணி தூய்மைப்படுத்தும் பணிகளில் மக்கள் மனதில் விழிப்புணர்வு ஏற்படுத்த மாணவ, மாணவிகள் கொண்டு செல்ல வேண்டும்.

இன்று நடைபெற்ற தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து மாணவ, மாணவியர்களும் தொடர்ந்து தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட வேண்டும். பொதுமக்களிடம் தூய்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கரையோர பொதுமக்கள் ஆற்றினை தூய்மையாக வைத்துக் கொள்வது குறித்தும், தன் சுத்தம் திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தாமிரபரணி சுத்தம்படுத்தும் பணிகள் இனி ஒவ்வொரு மாதமும் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என பேசினார்.

மேலும் தாமிரபரணி ஆற்றினை பாதுகாத்திட மாணவ, மாணவிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி குற்றவியல் நீதியரசர் திருமதி.ஜெனித்தா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, அண்ணா பல்கலைக்கழக முதல்வர் திரு.சக்திநாதன், சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அண்ணபாக்கியம் கல்லூரி முதல்வர் திரு.ஜோயல் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அண்ணபாக்கியம் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.